

விழுப்புரம் மாவட்டம் ஒருங்கிணைந்த தொழிலாளர் நலத்துறை அலுவலக் கட்டிடம் ரூ.3.14 கோடி மதிப்பிலான அடிக்கல் நாட்டு விழாவில் உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி கலந்து கொண்டு அடிக்கல் நாட்டினார். மாவட்ட ஆட்சியர் டாக்டர் சி.பழனி, விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ , விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா.இலட்சுமணன், மாவட்ட பொருளாளர் இரு. ஜனகராஜ், துணைச் செயலாளர் தயா இளந்திரையன், நகர மன்ற தலைவர் ச.தமிழ்ச்செல்வி பிரபு, துணை தலைவர் சித்திக் அலி, நகர பொருளாளர் இளங்கோ, நகர மன்ற உறுப்பினர்கள் ஜனனி தங்கம், மணவாளன், புருஷோத்தமன், சிவக்குமார், தொண்டர் அணி கபாலி, தகவல் தொழில்நுட்ப அணி அன்பரசு, வார்டு செயலாளர்கள் என். டி. தங்கம், சுந்தர், இலக்கிய அணி சாதிக், வார்டு நிர்வாகிகள் சக்ரவர்த்தி, செங்குட்டுவன், சீனுவாசன், அசோக், சக்திவேல், பலராமன், அஜித் குமார் கழகத்தினர் மற்றும் அரசு அதிகாரிகள் பலர் உடனிருந்தனர்.



கழகத்தின் கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவையின் செயலாளர் பொள்ளாச்சி உமாபதி முன்னிலையில், திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் நிறுவனர் மற்றும் பொதுச் செயலாளர் பேராசிரியர் சுப.வீ. வட சென்னை தமிழ்ச் சங்கத்தின் சார்பில்,கலைஞர் நூற்றாண்டு விழா முத்தமிழ் அறிஞர் கலைஞர் சிறப்பு விருதினை, கழக இலக்கிய அணியின் துணைத்தலைவர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கவிச்சுடர் கவிதைப்பித்தன் அவர்களுக்கு வழங்கி வாழ்த்துரையாற்றிச் சிறப்பித்தார்.

### சிவகாசியில் – கால்நடை பராமரிப்புத்துறை சார்பில்

# ரூ.81 இலட்சம் மதிப்பில் புதிய கால்நடை மருந்தகக் கட்டிடங்கள்!

## அமைச்சர் தங்கம் தென்னரசு திறந்து வைத்தார்!

சிவகாசி, ஜூன் 25 -

கால்நடை பராமரிப்புத் துறை சார்பில், சிவகாசி வட்டம், ஆனைக்குட்டம் மற்றும் பள்ளப்பட்டி கிராமங்களில் மொத்தம் ரூ.81 இலட்சம் மதிப்பிலான புதிய கால்நடை மருந்தக கட்டடங்களை நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு திறந்து வைத்தார்.

விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், ஆனைக் குட்டம் மற்றும் பள்ளப் பட்டி கிராமங்களில் கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் 18.06.2023 அன்று மொத்தம் ரூ.81 இலட்சம் மதிப்பிலான புதிய கால்நடை மருந்தக கட்டடங்களை, விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர். ஆர்.சீனிவாசன் முன்னிலையில், அமைச்சர் தங்கம்தென்னரசு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தனிநபர் பொருளாதார முன்னேற்றத்திற்கு பல்வேறு நலத்திட்டங்களை வழங்கி, கடைக்கோடி கிராமப்பகுதிகள் வரை பயன்பெறும் வகையில் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள்.

பொதுவாக, நமது பகுதி விவசாயத் தொழிலையே நம்பி வாழும் பகுதியாகும். அதற்கு இணையாக கால்நடைகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. கால்நடை வளர்ப்பவர்களுக்கு உதவியாக கால்நடைப் பராமரிப்புத் துறையின் மூலம் தேவையான திட்டங்கள் வழங்கப்பட்டு வருவதுடன், கூடுதலாக பொதுமக்கள் பயன்பெறும் வகையில் அதிகளவில் கால்நடைகளை வளர்க்க அரசு பல்வேறு திட்டங்களை வழங்கி வருகின்றன.

அந்த கால்நடைகளுக்குத் தேவையான மருத்துவ உதவிகளை வழங்கும் விதமாக, ஆனைக்குட்டம் மற்றும் பள்ளப்பட்டி கிராமங்களில் தலா ரூ.40.50 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.81 இலட்சம் மதிப்பிலான பல்வேறு வசதிகளுடன் கூடிய கால்நடை மருந்தகங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன என அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் கால்நடைப் பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் மரு.கோவில்ராஜா, சிவகாசி ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் திருமதி முத்துலட்சுமி, துணைத்தலைவர் விவேகன்ராஜ், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### கழக இலக்கிய அணி மாநில துணைத்தலைவர்,
### கவிச்சுடர் கவிதைப் பித்தனுக்கு-வட சென்னை தமிழ்ச்சங்கம் சார்பில்

# “கலைஞர் நூற்றாண்டு முத்தமிழ் அறிஞர் சிறப்பு விருது”: பேராசிரியர் சுப.வீரபாண்டியன் வழங்கினார்!

## பொள்ளாச்சி உமாபதி, எ.த.இளங்கோ, தமிழ்ச் சான்றோர் பங்கேற்பு.

சென்னை, ஜூன் 25 -

தாய்மொழித் தமிழ்மீது தீராத பற்றுக் கொண்டு, தமிழின மேம்பாட்டில் அக்கறையும் ஆர்வமும் கொண்டு, திராவிட முன்னேற்றக் கழகத்தின்பால் தீவிர ஆதரவும் கொண்டு, ஆக்கப்பூர்வமான பல்வேறு கடமைகளை நிறைவேற்றிச் சான்றோர் பெருமக்களின் பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் பெற்றுப் பீடு நடை போட்டுவரும் வட சென்னைத் தமிழ்ச் சங்கம், முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டுத் தமிழுக்குக் கடந்த பல ஆண்டுகளாக அளப்பரிய தொண்டாற்றிவரும் அறிஞர், கவிஞர் பெருமக்களுக்கு அவர்களின் ஆற்றலை, அரும்பணியைப் போற்றும் வகையில் விருது வழங்கிச் சிறப்பித்து வருகின்றது. அந்த வகையில், 22.6.2023 ஆம் தேதி, சென்னையில் திராவிட இயக்கத் தமிழர் பேரவை தலைமை அலுவலகத்தில்,கழகத்தின் கலை, இலக்கியப் பகுத்தறிவுப் பேரவையின் செயலாளர் பொள்ளாச்சி உமாபதி முன்னிலையில், திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் நிறுவனர் மற்றும் பொதுச் செயலாளர் பேராசிரியர் சுப.வீ. வட சென்னை தமிழ்ச் சங்கத்தின் சார்பில்,

கலைஞர் நூற்றாண்டு விழா முத்தமிழ் அறிஞர் கலைஞர் சிறப்பு விருதினை, கழக இலக்கிய அணியின் துணைத்தலைவர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கவிச்சுடர் கவிதைப்பித்தன் அவர்களுக்கு வழங்கி வாழ்த்துரையாற்றிச் சிறப்பித்தார்.

வட சென்னை தமிழ்ச்சங்கத் தலைவர் எ.த.இளங்கோ வரவேற்புரை நிகழ்த்திட, பொள்ளாச்சி உமாமதி பாராட்டுரை பொழிந்தார்.

விழாவில் பொன்னாடைகளும் புத்தகங்களும் கவிச்சுடருக்குப் பரிசுகளாக வழங்கப்பட்டன.

திராவிட இயக்கத்தமிழர் பேரவையின் பெரியவர் லாரன்ஸ், நிக்கோலஸ், வட சென்னைத் தமிழ்ச் சங்கத்தின் துணைத்தலைவர்கள் குறிஞ்சி பாலாஜி, சூ.லாரன்ஸ், துணைச்செயலாளர் ரமாபாய், தமிழ்ச்சங்க ஆலோசகர்கள் வழக்கறிஞர் ஏவள் ரவி, ப.மனோகரன், செயற்குழு உறுப்பினர் அ.பெ. ஆசைமுகம் மற்றும் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர் கவிஞர் ஆ. மரியஎட்வின் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்ட இவ் விழாவில், தலைவர் கலைஞர் அவர்களுடனான பசுமையான பல்வேறு நிகழ்வுகளை நினைவு கூர்ந்து கவிச்சுடர் கவிதைப் பித்தன் உருக்கமானதோர் ஏற்புரை வழங்கினார்.

### திண்டுக்கல் கிழக்கு மாவட்டத்தில் – இளைஞர் அணி சார்பில்

# பொதுக்கூட்டங்கள் - தெருமுனைக் கூட்டங்கள்!

## மாவட்டச் செயலாளர் ஐ.பி.செந்தில்குமார் எம்.எல்.ஏ.அறிவிப்பு!



கழகத் தலைவர், தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படியும், கழக இளைஞர் அணிச் செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படியும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி ஆலோசனையின்படியும் திண்டுக்கல் கிழக்கு மாவட்டத்தில் மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் முத்தமிழ் அறிஞர், கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும் கழக அரசின் 2 ஆண்டு சாதனை விளக்க பொதுக் கூட்டங்கள் மற்றும் தெருமுனை பிரச்சாரக் கூட்டங்கள் கீழ்க்கண்டவாறு நடைபெறவுள்ளது.

| நாள் | நகரம் / ஒன்றியம் / பகுதி / பேரூர் | கழக பேச்சாளர்கள் |
|---|---|---|
| | **ஆத்தூர் சட்டமன்றத் தொகுதி** | |
| 25.06.23, ஞாயிறு | ரெட்டியார்சத்திரம் தெற்கு | ஆடுதுறை உத்திராபதி |
| 26.06.23, திங்கள் | ஆத்தூர் கிழக்கு | சைதை சாதிக் |
| 28.06.23, புதன் | ஆத்தூர் மேற்கு | திப்பம்பட்டி ஆறுச்சாமி |
| 28.06.23, புதன் | அகரம், தாடிக்கொம்பு பேரூர் | போடி காமராஜ் |
| | **பழனி சட்டமன்றத் தொகுதி** | |
| 24.06.23, சனி | கொடைக்கானல் நகரம் | கரூர் முரளி |
| 25.06.23, ஞாயிறு | கொடைக்கானல் கீழ்மலை | வேடசந்தூர் முருகவேல் |
| 26.06.23, திங்கள் | பழனி மேற்கு ஒன்றியம் | கந்திலி கரிகாலன் |
| 27.06.23. செவ்வாய் | பழனி நகரம் | கரூர் முரளி |
| 27.06.23. செவ்வாய் | பழனி கிழக்கு ஒன்றியம் | ஈரோடு சத்யவதி |
| 28.06.23, புதன் | கொடைக்கானல் மேல்மலை | கந்திலி கரிகாலன் |
| 28.06.23, புதன் | பாலசமுத்திரம், ஆயக்குடி பேரூர் | தூத்துக்குடி சரத்பாலா |
| | **திண்டுக்கல் சட்டமன்றத் தொகுதி** | |
| 24.06.23, சனி | திண்டுக்கல் தெற்கு பகுதி | வேடசந்தூர் முருகவேல் |
| 25.06.23, ஞாயிறு | திண்டுக்கல் கிழக்கு பகுதி | சைதை சாதிக் |
| 26.06.23, திங்கள் | திண்டுக்கல் மேற்கு பகுதி | போடி காமராஜ் |
| 27.06.23. செவ்வாய் | திண்டுக்கல் வடக்கு ஒன்றியம் | கந்திலி கரிகாலன் |
| 28.06.23, புதன் | திண்டுக்கல் வடக்கு பகுதி | கரூர் முரளி |
| 29.06.23. வியாழன் | திண்டுக்கல் தெற்கு ஒன்றியம் | தூத்துக்குடி சரத்பாலா |
| | **நிலக்கோட்டை சட்டமன்றத் தொகுதி** | |
| 25.06.23, ஞாயிறு | பட்டிவீரன்பட்டி, சேவுகம்பட்டி பேரூர் | திப்பம்பட்டி ஆறுச்சாமி |
| 27.06.23. செவ்வாய் | வத்தலக்குண்டு ஒன்றியம் | ஆடுதுறை உத்ராபதி |
| 27.06.23. செவ்வாய் | நிலக்கோட்டை தெற்கு | போடி காமராஜ் |
| 30.06.23, வெள்ளி | நிலக்கோட்டை வடக்கு | மதுரை சாதுராஜன் |

அதுசமயம் சம்பந்தப்பட்ட ஒன்றிய, நகர, பகுதி, பேரூர்ச் செயலாளர்கள் மற்றும் இளைஞர் அணியினர் இணைந்து இக்கூட்டங்களை சிறப்பாக ஏற்பாடு செய்து கழகத்தின் அனைத்து நிர்வாகிகள், சார்பு அணியினர், உள்ளாட்சிமன்ற முன்னாள் இந்நாள் பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், கழக உடன்பிறப்புகள் மற்றும் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்துகொள்ளும் வகையில் சிறப்பாக ஏற்பாடு செய்து கூட்டங்களை நடத்திடுமாறும் அனைவரும் கலந்துகொண்டு கூட்டங்களை சிறப்பிக்குமாறும் கேட்டுக் கொள்கிறேன்.

**ஐ.பி.செந்தில்குமார் எம்.எல்.ஏ.**
செயலாளர்
திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க.

### தென்றல் செல்வராஜ் தலைமையில்

# பொள்ளாச்சியில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு பொதுக்கூட்டம் - பட்டிமன்றம்!

## தளபதி முருகேசன் துவக்கி வைத்தார்!

பொள்ளாச்சி, ஜூன் 25 -

பொள்ளாச்சி திருவள்ளுவர் திடலில் கழக சட்டதிட்ட திருத்தக் குழு மற்றும் கோவை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பாக முத்தமிழறிஞர் தமிழினத்தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு துவக்கவிழா மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் சன் டிவி, விஜய் டிவி, கலக்கப்போவது யாரு புகழ் “மதுரை முத்து” நடுவராகப் பங்கு பெறும் சிரிப்பு சிந்தனை பட்டிமன்ற நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சியை மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன் துவக்கி வைத்தார்

கழக சட்ட திட்ட திருத்தக்குழு உறுப்பினர் தென்றல் செல்வராஜ் தலைமையில்,

தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.அமுதபாரதி வரவேற்புரையில்

பொள்ளாச்சி நகர செயலாளர் இரா.நவநீதகிருஷ்ணன், ஆனைமலை மேற்கு ஒன்றிய செயலாளர் செ.தேவசேனாதிபதி , ஆனைமலை கிழக்கு ஒன்றிய செயலாளர் யுவராஜ், பொள்ளாச்சி வடக்கு மத்திய ஒன்றிய செயலாளர் பி.ராஜூ, பொள்ளாச்சி வடக்கு மேற்கு ஒன்றிய செயலாளர் கி.ரமேஷ், ஆனைமலை வடக்கு ஒன்றிய செயலாளர் கன்னிமுத்து, கிணத்துக்கடவு தெற்கு ஒன்றிய செயலாளர் செ.ஆ.துரை ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் பி.ஏ.செந்தில்குமார் MC, வருகை தந்த அனைவருக்கும் நன்றி கூறினார்.

இந்நிகழ்ச்சியில் கழக ஆதிதிராவிட நலக்குழு இணை செயலாளர் திப்பம்பட்டி ஆறுச்சாமி, கழக அமைப்பு சாரா ஓட்டுநர் அணி துணை செயலாளர் பனப்பட்டி கே.தினகரன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் மு.க.முத்து, ஏர் போட் ராஜேந்திரன், மாவட்ட துணை செயலாளர்கள் சி.பொன்னுச்சாமி, செ.கனிமொழி , நகர மன்ற தலைவர் சியாமளா நவநீத கிருஷ்ணன், துணை தலைவர் எஸ்.கௌதமன், பொதுக்குழு உறுப்பினர்கள் கோ.பாலகிருஷ்ணன், எஸ்.ஆர்.அண்ணாதுரை, ஏ.ஆர்.வி.சாந்தலிங்கம், நகராட்சி வழக்கறிஞர் மருதராஜ், முன்னாள் அரசு வழக்கறிஞர் வி.பி.கிரி, சிட்டிடிவி உசேன், நகர அவைத் தலைவர் அழகப்பன், மாவட்ட பிரதிநிதிகள் சி.நாகராஜ் எம்.சி., இரும்பு சுப்பரமணியம், பேரூர் கழக செயலாளர் கோ.வே. பால்ராஜ், எம்.எஸ்.ஆறுச்சாமி, கோட்டூர் பேரூராட்சி மன்ற தலைவர் ராமகிருஷ்ணன், ஆனைமலை பேரூராட்சி மன்ற தலைவர் கலைச்செல்வி சாந்த லிங்க குமார், மாவட்ட ஆதிதிராவிட நலக்குழு அமைப்பாளர் மா.மாணிக்கராஜ், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் தனம் தங்கதுரை, மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் எஸ்.சக்திவேல், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் இ.ஆர்.பிரபாகரன், மாவட்ட சிறுபாண்மை பிரிவு அணி அமைப்பாளர் பைஜில், கழக பேச்சாளர்கள் மைக் வெள்ளிங்கிரி, இலக்கியம் ராஜ்குமார், ராஜ பெருந்தகை, சா.குட்டப்பன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் சபரிகிருஷ்ணன், போடிபாளையம் ஊராட்சி மன்றத் தலைவர் என்.ஆர்.ராஜா , காபிலிபாளையம் ஊராட்சி மன்றத் தலைவர் வே.கார்த்திக், மாவட்ட பிரதிநிதி ராம்பட்டிணம் சபரி நகர மன்ற உறுப்பினர்கள் உமா மகேஷ்வரி, போர்வெல் துரை, செ. மணிமாலா தென்றல், எம். கவிதா, டேஸ்டி பாலு, ஆஜி இளமாறன், சு.தங்கவேல், பால கிருஷ்ணவேணி, விஜயா காயத்ரி, பெருமாள், சண்முகப்பிரியா மாவட்ட சார்பு அணி துணை அமைப்பாளர்கள் அய்யம்புதூர் வெங்கடாசலம், கே.சந்தோஷ்குமார், கே.இமயவரம்பன், முத்துலட்சுமி, லிங்கதுரை, மலர் பாலு, சு.பட்டீஸ்வரன், பூக்கடை சம்சுதீன், ஜி.டி. கணேஷ்பிரசாத்,

வட்ட கழக செயலாளர்கள் சரவணன், கு.ராமசந்திரன், பூவை செல்வராஜ், மு.கா.பஜ்லுள்ஹக், தா. ஜெகதீசன், கா.ஜெய லாப்தீன், கே.பி.மணிகண்டன், பி.தர்மலிங்கம், போஜராஜன், கணேசன், ம.ஜெயசந்திரன், எம்.ஜெயலாப்தீன் , எம்.நாகேந்திரன், சி.எஸ். கருப்பையா, சி.ஆறுமுகம், எ.ரமேஷ்குமார், எஸ்.செந்தில்ராஜ்.


வட்ட பிரதிநிதிகள் பி. லோகநாதன், எம். வி.ஜெயக்குமார், லதா செல்வராஜ், ரா.ஜெக தீஸ் குமார், தி.கனகராஜ், ஆர். செல்வராஜ், வி.சபாபதி, இணையதுல்லாகான் நகர இளைஞர் அணி அமைப்பாளர் பா.திருமலைராஜா, துணை அமைப்பாளர்கள் சதீஷ், பைக்பாபு, அசோக், ஈஸ்வரன்

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள் மணிமாறன் தென்றல், மு.கமல கண்ணன், அபுதாகிர், அரவிந்த் வசந்த்ராம்,

சி.விக்னேஷ் பிரபு, அவினாஷ் கார்த்திக், நவின்குமார், சா.சரவ ணக்குமார், கா.மணிகண்டன், கு.மகேந்திரன், பிரவின் குமார், ரகு. அஸ்வின், தினேஷ், முகேஷ் பாண்டி, த.கி.புதூர் மாரிமுத்து, பாண்டிதுரை, பூபதி, ரங்கநாதன், சு.கௌதம், ஆனந்த்கணேஷ், ஹரிபிரகாஷ், தாஸ்பிரபு, ரஞ்சன் பாபு, சபரிதுரை, தா. சுபாஷ், பா.சபரி, ஆட்டோ அமீது, ஆட்டோ ஆறுமுகம் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# ஜி.பி. சோமசுந்தரம்
## ஜூன் 25 (1971)



**கழகத்தின் முதுபெரும் தலைவர். “பட்டாளத்துச் சிங்கம்” எனவும், “சேலத்துப் பெரியார்” எனவும் கழகத் தோழர்களால் அன்போடு அழைக்கப்பட்டவர்.**

**திராவிட இயக்கத் தொடக்க காலத்திலிருந்து தொண்டாற்றி வந்தவர். பேரறிஞர் அண்ணா அவர்களின் அன்புக்கும், மரியாதைக்கும் உரிய கழக முன்னணித் தலைவர்களில் முக்கியமானவராக விளங்கியவர்.**

**கழகத்தின் தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினராகவும் – சேலம் மாவட்டக் கழகச் செயலாளராகவும் – மாநிலங்களவை உறுப்பினராகவும் பணியாற்றியவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**